# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2013/2014

## ED / S 3213 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும் (Teaching Methods & Techniques)

---

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

1. அ. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியரின் மூன்று வகிபாகங்களை எடுத்துக் கூறி, தற்கால ஆசிரியரின் வகிபாகத் தன்மையின் பண்புகள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   ஆ. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் புலக்காட்சித்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகவய, புறவயக் காரணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   இ. வினைத்திறனான வகுப்பறை கற்பித்தல் செயற்பாட்டில் வகுப்பறையின் கவின்நிலை முக்கியமானதாக கருதப்படுகிறது. இது பற்றிய உமது விளக்கத்தைத் தருக. (04 புள்ளிகள்)

2. அ. கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது மூவழித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமாகும். இச் செயற்பாடு எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   ஆ. அதிகஸ்ட பிரதேச ஆரம்ப பாடசாலைகளில் பல்வகுப்பு கற்பித்தல் முறை சிறந்த வினைத்திறனுடையதாக அமைகின்றது. இதன் ஒழுங்கமைப்பு, செயற்பாடு பற்றி விளக்கி, இக்கற்பித்தலின் நன்மைகள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

   இ. இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்குக் கலந்துரையாடல் முறை மூலம் கற்பித்தல் சிறந்த பயனுடையதாக அறியப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் எட்டினைச் (8) சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

3. அ. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் விசேட குறிக்கோளை அமைப்பதன் முக்கியத்துவம் ஆறினை (06) சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ. வகுப்பறைச் செயற்பாட்டின் இறுதியில் விசேட குறிக்கோளானது அடையப்பட்டுள்ளதா என்பதைப் பகுப்பாய்வு செய்து மாணவர்களின் நடத்தை மாற்றத்தை எவ்வாறு மதிப்பிடுவீர் என விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

4. அ. "வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்கள் ஒரு பாடவிடயத்தினூடாக எதிர்பார்க்கும் கற்பித்தலின் நோக்கம், அடைய உத்தேசிக்கும் கற்பித்தல் மாதிரி, இதனூடாகக் கையாளப்பட வேண்டிய கற்பித்தல் முறை ஆகியன வினைத்திறனான கற்பித்தலின் அடிப்படைக் கூறுகளாகும்." இது பற்றிய உமது கருத்தினை முன்வைத்து விளக்குக. (14 புள்ளிகள்)

   ஆ. அறிகைசார் உளவியல் கோட்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட கற்பித்தல் மாதிரியின் செயற்பாட்டினைச் சுருக்கமாக விளக்கி, இதன் கல்வி நோக்கங்கள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

5. அ. கற்பித்தலில் வினாக்களின் பயன்பாடுகள் ஐந்தினைச் எடுத்துக் கூறி, வினா கேட்கும் ஆசிரியரிடம் இருக்க வேண்டிய இயல்புகள் பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க. (10 புள்ளிகள்)

   ஆ. மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு, ஆசிரியரின் நடத்தையும், உளப்பாங்கும் வெற்றிகரமான கற்பித்தலுக்குப் உறுதுணையாக உள்ளன. இதனடிப்படையில் ஆசிரியர் வெளிப்படுத்தும் சிறப்பான நடத்தைகள் ஐந்தினை (5) விளக்குக. (5x2=10 புள்ளிகள்)

   இ. சிறந்த வினாக்களின் இயல்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

6. அ. சிந்தனையின் மிக உயர்ந்த கட்டமான ஆய்வுச் சிந்தனையின் மூலம் மாணவன் எதிர்நோக்கும் பாடரீதியான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டங்களைப் பட்டியற்படுத்துக. (10 புள்ளிகள்)

   ஆ. கற்பித்தலை ஒழுங்காகவும் சிறப்பாகவும் செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை ஒப்படை மூலம் கிடைக்கின்றது. இதன் அடிப்படையில் ஒப்படையில் அடங்க வேண்டிய அம்சங்களை கற்பித்தலில் எவ்வாறு பிரயோகிப்பீர் என்பதை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

இ. முன்திட்டமுறைக் கற்பித்தல் என்றால் என்ன? நேர்த்திட்டம், கிளைத்திட்டம் ஆகியவற்றின் வகுப்பறை பிரயோகங்களைச் சுருக்கமாக விளக்கி, அதன் வினைத்திறனை எவ்வாறு மதிப்பிடலாம் எனக் கூறுக. (04 புள்ளிகள்)

7. அ. செயற்றிட்டமுறைக் கற்பித்தல் என்றால் என்ன? இக் கற்பித்தல் முறையின் நன்மைகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. குறித்த நோக்கங்களை அடைவதற்காக ஆசிரியர் பாடத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் எட்டினைக் (08) கூறி உமது கருத்துக்களை முன்வைக்குக. (8x1=08 புள்ளிகள்)

இ. வினைத்திறனுள்ள வகுப்பறைச் செயற்பாட்டுக்காகப் பாடத்திட்டமொன்றில் இருந்து வேலைத்திட்டம், பாடக்குறிப்பு தயாரிக்கப்படுமாற்றை மதிப்பிடுக. (06 புள்ளிகள்)